மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.183/2022

2025ம் ஆண்டு செப்டம்பர் 03ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொன்னுசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

03.09.2025 பி.வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வாதி மாணிக்கவாசகம் என்பவரின் தாயார் பெயர் வீரம்மாள் என்றால் சரிதான். மேற்படி வீரம்மாள் என்பவரின் தாயார் பெயர் ராமாயி அம்மாள் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் ஆதியில் மேற்படி இராமாயி அம்மாள் என்பவருக்கு 1945 ஆம் வருடத்திய கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இராமாயி அம்மாள் தன் மகளான வீரம்மாள் என்பவருக்கு தாவா சொத்துக்களை பொறுத்து கடந்த 1968 ஆம் ஆண்டு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

2. மேற்படி வீரம்மாள் என்பவருக்கு இந்த வழக்கின் வாதியான மணிவாசகம் கணேசமூர்த்தி மற்றும் சரோஜினி ஆகியோர்கள் மக்கள் என்றால் சரிதான். வீரம்மாள் தனக்கு தான செட்டில்மெண்ட்

ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து வாதி மாணிக்கவாசகம் என்பவருக்கு ஒரு உயில் எழுதிய வைத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. வீரம்மாள் எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் தான் தாவா சொத்துக்கள் என்றால் சரிதான்.

3. தாவா சொத்துக்களில் வீரம்மாளின் தாயார் ராமாயி அம்மாள் என்பவர் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. என் தகப்பனார் பெயர் சின்னப்ப நாடார். சின்னப்ப நாடாருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். என் தகப்பனாரின் முதல் மனைவி பெயர் பெரியம்மாள். இரண்டாம் மனைவி பெயர் பெரியம்மாள் தான். இந்த வழக்கின் பிரதிவாதியான மணி என்பவர் எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் ஆமாம்.

4. இந்த வழக்கின் சொத்துக்களை பொருத்தவரை சின்னப்ப நாடாருக்கோ அவரது மனைவி பெரியம்மாளுக்கோ இந்த வழக்கின் பிரதிவாதி மணிக்கோ, எனக்கோ எந்த பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அது எங்கள் தாத்தா சொத்து அது எங்கள் தாத்தா பட்டா வாங்கியுள்ளார். அதில் நாங்கள் பிறந்ததிலிருந்து இருந்து வருகிறோம். இந்த வழக்கின் தாவா சொத்துக்களை பொருத்து எனது பெயருக்கோ சின்னப்பாநாடாருக்கோ, அவரது மனைவி பெரியம்மாளுக்கோ, பிரதிவாதி மணிக்கோ, எனக்கோ பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் இருக்கிறது ஆனால் அது மேற்கோட்டில் உள்ளது.

5. எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தை

பொருத்து மேல்கோர்ட்டில் எனது தாத்தா பெயருக்கு ஆவணங்கள் உள்ளது என்ற விபரத்தை நான் தாக்கல் செய்த முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து என் தாத்தா பெயரில் என்ன பத்திரம் உள்ளது என்றால் அடமான பத்திரம் உள்ளது.

6. 1959 ஆம் ஆண்டு என் தாத்தா தாவா சொத்தை அடமானம் வாங்கியுள்ளார். யாரிடமிருந்து என் தாத்தா அடமானம் வாங்கினார் என்றால் யாரிடம் இருந்து அடமானம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது பத்திரம் உள்ளது அதை நான் படிக்கவில்லை. இதுநாள் வரை நான் அந்த அடமான பத்திரத்தை பார்த்து உள்ளேனா என்றால் பார்க்கவில்லை. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதை பொறுத்து வாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் வழக்கறிஞர் மூலம் வாங்கி படித்து பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 54-1/2 சென்ட் என்றால் சரியல்ல 1 ஏக்கர். அந்த ஒரு ஏக்கர் நிலத்திற்கு உண்டான பத்திரத்தை நான் பார்த்து உள்ளேனா என்றால் இல்லை பட்டாவை தான் பார்த்து உள்ளேன். அந்த பட்டா மணி பெயரில் உள்ளதா என்றால் இல்லை. சின்னப்ப நாடார், வீரம்மாள், பழனிச்சாமி நாடார் ஆகியோர் பெயரில் உள்ளது. மேற்படியார்கள் உறவினர்கள் என்றால் ஆமாம்.

7. என் தகப்பனார் சின்னப்ப நாடார் முதல் தாரத்து மகன். வீரம்மாள் மற்றும் பழனிச்சாமி ஆகியோர் இரண்டாம் தாரத்து வாரிசுகள். மேற்படியார்களின் தகப்பனார் பெயர் நாச்சிமுத்து நாடாரா என்றால் ஆமாம்.நாச்சிமுத்து நாடார் பெயரில் சொத்துக்கள் ஏதேனும் உள்ளதா என்றால் 1955 இல் நாச்சிமுத்து நாடாரின் தகப்பனார் சொத்துக்களை

பாகக்கறால் செய்து கொண்டார்கள். 1957ல் ஒரு கிரயம் செய்து கொண்டுள்ளார். 1959ல் இந்த தாவா சொத்தை அடமானம் வாங்கியுள்ளார். மேற்படி ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை நீதிமன்ற உத்தரவை மட்டும் தாக்கல் செய்துள்ளேன்.

8. 1955 பாகப்பிரிவினை ஆவணம் மற்றும் 1957 கிரைய ஆவணம் மற்றும் 1959 அடமான ஆவணம் ஆகியவற்றை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேன் என்ற விபரத்தை நான் தாக்கல் செய்த முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணங்களில் கண்டுள்ள சொத்தில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் அளந்து பார்த்தால் தான் தெரியும் தெரியவில்லை.

9. மேற்படி ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களின் காலை எண் தெரியுமா என்றால் பழைய காலை எண்.1184. மேற்படி பழைய காலை எண்.1184 பூமியின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 3 ஏக்கர் 50 சென்ட். இந்த வழக்கின் பிரதிவாதி மணி எவ்வளவு ஏக்கர் நிலத்தை பொறுத்து இந்த வழக்கை நடத்தி வருகிறார் என்றால் 1 ஏக்கர் நிலத்தில் பட்டாபடி அவருக்கு பாத்தியப்பட்ட பங்கை பொறுத்து இந்த வழக்கை நடத்தி வருகிறார். பட்டாபடி பிரதிவாதி மணி அவருக்கு எவ்வளவு ஏக்கர் பாத்தியம் உள்ளது என்று இந்த வழக்கை நடத்தி வருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது.

10. தாவா சொத்தில் உள்ள வீட்டை பொருத்து என் தகப்பனார் பெயரில் பட்டா உள்ள காரணத்தினால் பிரதிவாதி மணி பங்கு கேட்டு வழக்கை நடத்தி வருகிறார். பட்டா சின்னப்ப நாடாருக்கு எந்த

ஆவணத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்றால் நாச்சிமுத்து நாடாருக்கு பாத்தியப்பட்ட 1184 பத்திரத்தின் அடிப்படையில் சின்னப்ப நாடாருக்கு பட்டா கொடுத்தார்கள். 1945 ஆம் ஆண்டு பத்திரத்தில் தாவா சொத்தில் வீடு உள்ளதாக சொல்லப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1968 இல் அந்த வீட்டை வீரம்மாள் என்பவர் அனுபவித்து வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரிந்த அந்த வீட்டில் யாருமே குடி இல்லை.

11. வீரம்மாள் இறந்ததற்கு பின்னிட்டு வாதி தாவா சொத்தில் உள்ள வீட்டில் மின் இணைப்பு பெற்று வரி வகைகள் செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. என் அண்ணன் தான் அந்த வீட்டில் குடியிருந்து அனுபவம் செய்து வருகிறார். 1945 மற்றும் 1968 கிரைய ஆவணங்களில் கண்டுள்ள தாவா சொத்தில் வீடு உள்ளது என்றால் அங்கு வீடே இல்லை. தாவா சொத்தான 54–½ சென்ட் பூமியில் மணி குடியிருந்து வருகிறாரா என்றால் இன்னும் பிரிக்கப்படவில்லை ஒரு ஏக்கரில் மணி குடியிருந்து வருகிறார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

12. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்தது இல்லை. மணிவாசகம் தாயாரை நான் பார்த்து உள்ளேனா என்றால் சிறு வயதில் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணத்தில் செட்டில்மெண்டில் உள்ள புகைப்படம் வீரம்மாள் உடையது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வீரம்மாள் என்பவரால் வாதிக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம்

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் அது பொய் பத்திரம் என்கிறார் நாளதுதேதி வரை வாதி தாவா சொத்துகளுக்கு வரி வகைகள் செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

13. தாவா சொத்திற்கு தென்புறமாக கிழமேல் பாதை உள்ளதா என்றால் கிழமேல் சாலை உள்ளது. அதற்கு தென்புறமாக என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளதா என்றால் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட வீடு அல்ல என் தம்பிக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது அது புறம்போக்கில் உள்ளது. அது புறம்போக்கு இடம் இல்லை என்றும் அது க.ச.எண்.1184 டி பூமிக்கு பாத்தியப்பட்ட இடம் என்றும் சொன்னால் சரியல்ல. அது சுடுகாட்டிற்கு பாத்தியப்பட்ட பூமி. சுடுகாட்டில் தான் பிரதிவாதி மணி வசித்து வருகிறாரா என்றால் அது என் அப்பா குடியிருந்த வீடு.

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் பி.வா.சா.2 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.09.03 18:37:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்